# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 12.06.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11015 & 11316/C/2022**

திரு.வ.அப்துல் நாசர், -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம். பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| **வழக்கு எண்கள்** | **SA 11015 & SA 11316** |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **20.01.2022** |
| சட்டப்பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றப்பட்ட நாள் | **31.01.2022** |
| பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்ட நாள் | **---** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **18.04.2022** |
| மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்ட நாள் | **-----** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **16.06.2022** |
| ஆணையத்தின் Preliminary Notice Dated | **24.08.2022** |
| மனுதாரர் (ம) பொ.த.அலுவலருக்கு விசாரணை அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் | **05.06.2025** |

**ஆணை**

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழான மனுவில் "Please furnish the information on status and action taken on the GDP petition (TN/REV/TLR/P/COLLMGDP/20SEPT21-1952485) filed on 20-Sept-2021" என்பன போன்ற தகவல்களை

2 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், முதல்வரின் முகவரி துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்களுக்கு மனு செய்துள்ளார். அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர்-3, சென்னை-9 அவர்கள் Letter No.Y/27653-Sec-3/2022-2, dated 31/01/2022 தேதியிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)(ii)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருவள்ளூர் மாவட்டம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அம்மனுவைப் பெற்ற மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் ந.க.4522/2022/RTI, நாள் 28.02.2022 தேதியிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)(ii)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், பூவிருந்தவல்லி அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் பெறப்படாததால் மனுதாரர் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், அவர்களுக்கு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து தகவல்கள் பெறப்படாததால் மனுதாரர் இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி மனுக்களின் மீதான இன்றைய (12.06.2025) நேரடி விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.ஆ.சுதா, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், பூவிருந்தவல்லி, திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். மனுதாரர் திரு.வ.அப்துல் நாசர், இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மனுதாரரின் அங்கீகாரக் கடிதத்துடன் அவரது பிரதிநிதியான மனுதாரரின் தகப்பனார் திரு.அப்துல் உஹாப், மற்றும் மனுதாரரின் சகோதரர் திரு.Abdul Tizzer இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்கள்.

3. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், பூவிருந்தவல்லி, திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் ஒ.மு.4327/2023/அ5, நாள் 25/09/2023 தேதியிட்ட கடிதத்தில் மனுதாரர் குறைதீர்க்கும் மனு நாளில் அளித்துள்ளதகாவும், மேற்படி மனுவின் பேரில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளருடன் புலத்தில் ஆஜராகி மேற்படி புலத்தை அளக்க கிராம கணக்குகள் பார்க்கப்பட்டது என்றும், மேற்படி புலமானது கண்டோண்மென்ட் புலமாகும் என்பதால், மேற்படி புல எண்ணுக்கான புலப்படம் கிராம கணக்கில் இல்லை என்றும், புலத்தை அளந்து காட்ட இயலாத சூழ்நிலை உள்ளது மேலும் புல எண்ணுக்கான புலப்பட நகல் வேண்டி சென்னை ஆவணகாப்பகம் மற்றும் மத்திய நில அளவை அலுவலகங்களுக்கு கடிதம் வைக்கப்பட்டுள்ளது என்றும் புல எண்ணுக்கான புலப்பட நகல் கிடைக்கப்பெற்ற பின் மனுதாரருக்கு புலத்தினை அளந்து அத்து காட்ட முடியும் என்ற விவரம் தகவலாக மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அவற்றின் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு மனுதாரரின் பிரதிநிதி தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்து தான் கோரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், காட்டுப்பாக்கம் புல எண்.400 குறித்து பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் பட்டா வழங்கப்பட்ட இடத்தில் FMB குறித்த

பதிவேட்டில் இல்லை என்பதால் அரசாங்கத்தால் தங்களது வீடு இடுக்கப்பட்டு அது குறித்து மாண்பமை உயர் நீதிமன்றத்தில் W.P.No.16247 of 2019, dated 26/02/2021-ல் வழக்கு தொடரப்பட்டு உள்ளதாகவும், அது குறித்து 12 வாரக் காலத்திற்குள் விசாரணை எடுக்குமாறு உயர்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய புல எண் குறித்த இடத்தை அளந்து காட்டுமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் வாதுரைகள், மனுதாரரால் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகள் ஆகியவற்றை ஒன்றன் பின் ஒன்றாக பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்து கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

> **“இவ்வாணைக் கிடைக்கப்பெற்றவுடன் மனுதாரரின் கோரிக்கை குறித்த தகவல்களான காட்டுப்பாக்கம் புல எண்.400-க்கான நில அளவை குறித்து வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பூவிருந்தவல்லி அவர்கள் காட்டுப்பாக்கம் கிராம புல எண் குறித்து மண்டல துணை வட்டாட்சியர், பூவிருந்தவல்லி, நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர், மற்றும் கிராம உதவியாளர், ஆகியோர்களிடம் விசாரணை மேற்கொண்டு அதுகுறித்த அறிக்கையினையும், மேலும், புல எண் தொடர்புடைய ஆவணங்களை ஆவணகாப்பகம், மற்றும் மத்திய நிலஅளவை அலுவலங்களுக்கு கடிதம் அனுப்பி வைத்து அது குறித்த ஆவணங்களையும், மற்றும் விசாரணை மேற்கொண்ட விசாரணை அறிக்கையினையும் 18.06.2025 அன்று வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், நிலஅளவையர், கிராம நிர்வாக அலுவலர், ஆகியோர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் மனுதாரரும் நேரில் விசாரணைக்கு ஆஜராகுமாறு அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

<u>**வழக்கு எண். SA 11015 & 11316/C/2022**</u>

வட்டாட்சியர்,
பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

மண்டல துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பூவிருந்தவல்லி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

நில அளவையர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பூவிருந்தவல்லி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

கிராம நிர்வாக அலுவலர்,
காட்டுப்பாக்கம்,
பூந்தமல்லி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.வ.அப்துல் நாசர்,
30, G1 TSR நிலையம்,
S.V. நகர், 3வது தெரு,
செந்நீர்குப்பம்,
சென்னை-600 056.

**<u>நகல்</u>**

உதவி ஆணையர்,
தமிழ்நாடு ஆவணகாப்பகம் (ம) வரலாற்று ஆராய்ச்சி,
51, காந்தி இர்வின் ரோடு,
எழும்பூர், சென்னை-8.

Directorate of Survey and Settlement
CENTRAL SURVEY OFFICE, SURVEY HOUSE,
PWD Estate, Chepauk, Triplicane,
Chepauk, Chennai – 600005.

Copy to: File NS/PA-